





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

We Are Here..!! To Guide You..!!







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 08.09.2018

We Shine Academy™
guiding you to get through

Main Office @
**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்













## இந்திய நிகழ்வுகள்

- **கேரளாவில்** உள்ள கிராம சுற்றுச்சூழல் வளர்ச்சிக்காக **ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின்** கீழ் **'மலநாடு மலபார் கடற்பயன சுற்றுலா'** என்னும் திட்டத்திற்கு மத்தியச் சுற்றுலாத் துறை அமைச்சகம் அனுமதி அளித்துள்ளது.

- **2017ம்** ஆண்டில் **அதிகமாக விமான பயணம்** மேற்கொண்டவர்களில் **உலக அளவில்** இந்தியர்கள் **3ம் இடம்** பிடித்துள்ளதாக **சர்வதேச விமான போக்குவரத்து கழகம்** தெரிவித்துள்ளது.
    - இப்பட்டியலில் **அமெரிக்கர்கள் முதலிடத்திலும், சீனர்கள் 2ம்** இடத்திலும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

- **சர்வதேச வான் போக்குவரத்து உச்சி மாநாடு** புது டெல்லியில் நடைபெற்றுள்ளது. இந்த உச்சி மாநாடானது மத்திய வான் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் இந்திய விமான நிலைய ஆணையம் மற்றும் சர்வதேச வான்வழிப் போக்குவரத்து சங்கத்துடன் இணைந்து நடத்தப்பட்டுள்ளது.

We Shine Academy

## உலக நிகழ்வுகள்

- பல்வேறு நாடுகளில் இருந்து தயாரிக்கப்பட்ட **ஹெலிகாப்டர்ஸ், போர் விமானம், பீரங்கி** உள்ளிட்ட **26 ஆயிரம்** விதமான ஆயுதங்கள் மற்றும் ராணுவ சாதனங்கள் கொண்ட **"சர்வதேச ராணுவ கண்காட்சி – 2018"** ரஷ்யாவின் **மாஸ்கோவில்** நடைபெற்றது.
    - இக்கண்காட்சியில் எதிரிகளுடன் சண்டையிடும் ராணுவ ரோபோவை, ரஷ்யா அறிமுகப்படுத்தியுள்ளது.
    - எதிரிகளுடன் சண்டையிடும் இராணுவ ரோபோவுக்கு 'இகோரெக்' என பெயரிடப்பட்டுள்ளது.

- **இந்தியா** மற்றும் **பல்கேரியா** நாடுகளுக்கிடையில் **அறிவியல்,**

**தொழில்நுட்பம், சுற்றுலா அணுசக்தி** மற்றும் பிற துறைகளில் கூட்டுறவை மேற்கொள்ளும் வகையில் இருநாட்டு தலைவர்கள் முன்னிலையில் **புரிந்துணர்வு ஒப்பந்தம்** கையெழுத்தாகி உள்ளது.

  - இறுதியில், சோபியாவில் உருவாக்கப்பட்டு இருந்த மகாத்மா காந்தியின் முழு உருவ சிலையை ராம்நாத் கோவிந்த் திறந்து வைத்துள்ளார்.

- **SLINEX – 2018 - இந்தியா** மற்றும் **இலங்கை** நாடுகளுக்கு இடையேயான **நல்லுறவினை வலுப்படுத்துவது** மற்றும் **கடல் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவது** தொடர்பான **கூட்டு கடற்படை போர் பயிற்சி** இலங்கையில் உள்ள **திரிகோணமலையில் செப்டம்பர் 07** முதல் தொடங்கியுள்ளது.
  - இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் இப்பயிற்சியில் முதன் முதலாக இலங்கை விமானப் படையும் பங்கேற்றுள்ளனர்.
  - இப்பயிற்சியில் இந்தியா சார்பில் **INS கிர்ச், INS – சுமித்ரா மற்றும் INS – கோராடிவ்** ஆகிய 3 போர் கப்பல்கள் பங்கேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

- அமெரிக்காவில் உள்ள **சிகாகோ** நகரில் மூன்று நாள் **உலக இந்து காங்கிரஸ் செப்டம்பர் 7 முதல்** தொடங்கியுள்ளது. இம்மாநாட்டில் 2000க்கும் அதிகமான பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர்.
- குறிப்பு:
  - 1893ம் ஆண்டு சுவாமி விவேகானந்தர் சிகாகோ நகரில் நடத்திய உரை உலக புகழ் பெற்றது. இவ்வுரையின் 125ம் ஆண்டு நினைவையொட்டி “சர்வதேச இந்து மாநாடு” சிகாகோ நகரில் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **தென்கொரியாவின்** சாங்வான் நகரில் நடைபெற்று வரும் **சாம்பியன் ஷிப் துப்பாக்கி சுடுதல் போட்டியில்** ஜூனியர் பிரிவில் ஆடவருக்கான **10 மீட்டர் ஏர்** ரைபிளில் **இந்தியாவின் ஹிருதய்**

We Shine Academy TM

**ஹஸாரிகா தங்கப்பதக்கம்** வென்றுள்ளார்.

- மகளிருக்கான ஜூனியர் பிரிவில் 10மீ ஏர் ரைபிளில் இந்தியாவின் இளவேனில் வாளறிவன் வெள்ளிப் பதக்கத்தையும் ஸ்ரேயா அகர்வால் வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- **நார்வே** நிறுவனமான **ஆ.்.ப்சோர் சென்சிங் ஏஎஸ்** என்ற நிறுவனத்தால் கட்டமைக்கப்பட்ட **'SB Met'** என்ற பட்கானது, **அட்லாண்டிக் கடந்த முதல் ஆளில்லா படகாக** (3000 கி.மீ. கடந்து) சாதனைப் படைத்துள்ளது.
    - இயந்திரத்தால் இயக்கப்படுகின்ற இந்த ஆளில்லா படகானது, கனடாவின் நியூ.்.பவுண்ட் லேண்டிலிருந்து அயர்லாந்து வரை 3000 கி.மீ. தூரத்தை இரண்டரை மாதத்தில் கடந்து சாதனைப் படைத்துள்ளது.

We Shine Academy™